Model orchard-cum-Nursery at Nagercoil, Kanyakumari district.
Model orchard-cum-Nursery at Thimmapuram.
Model orchard-cum-Nursery at Periyakulam, Madurai district.
Model orchard-cum-Nursery at Pattukottai, Thanjavur district.
Fruit Station at Kallar and Burliar (Nilgiris and Coimbatore).
Model orchard-cum-Nursery at Curtallam, Tirunelveli district.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இறக்குமதியைத் தடை செய்து விட்டபடியால் அதிகமாக விலை ஏறியும், ஸ்மக்ளிங் ஜாஸ்தியாக நடப்பதால் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் என்ன ? பாக்கு அதிகமாக வர ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பாக்கு வருவதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திருமதி சி. குழந்தையம்மாள் : இந்த பாக்குச் செடி அதிகமாக ஏற்படுத்த விவசாயப் பண்ணைகளில் விரிவு படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ? தென்னை போன்ற கன்றுகளுக்கு பாதி விலையில் கொடுப்பதுபோல மான்யமாகக் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : சப்ஸிடியைப் பொறுத்த வரையில் தனியாகக் கேள்வி போடவேண்டும். அதிகமாகக் கிடைக்கிற இடங்களில் நர்சரி ஏற்படுத்தியிருக்கிறோம். மேலும் பல இடங் களில், வாய்ப்பு இருக்கும் இடங்களில், அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டமாகும்.

நடமாடும் மருத்துவ மனை

*532 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப் பாரா—

நகர்புறத்தைவிட்டு ஒதுங்கிக்கிடக்கிற கிராமப்புறங்களுக்கு எளிதில் மருத்துவ உதவி கிடைக்கும்படி ஊர்ஊராகச் சென்று வரக் கூடிய நடமாடும் மருத்துமனை (Mobile Dispensary) களை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாவட்டங்களில் பற்பல இடங்களில் பத்து மொபைல் மருத்துவ வண்டிகள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டத்தில் ஆதிவாசிகளின் நலனுக்கென மற்றொரு மொபைல் மருத்துவ வண்டிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரி யில் பல் சிகிச்சைக்காக மொபைல் மருத்துவ வண்டி ஒன்றும் சென்னை கண் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்கான மொபைல் மருத்துவ வண்டி ஒன்றும் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக மற்றொரு மொபைல் மருத்துவ வண்டியும் உள்ளன. இவ் வண்டிகள் அருகிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றன. மேலும் மொபைல் மருத்துவ வண்டிகளைத் துவக்க அனுமதிக்கும் உத்தேசம் இப்போது இல்லை.

18th July 1964]

திரு. ஜே. மாதா கவுடர் : நீலகிரியிலே ஆதிவாசி மக்களுக்குக் கொடுத்திருக்கும் மொபைல் வான் வருஷத்தில் 11 மாதங்கள் ரிப்பேர் ஆகி விடுகிறது. புது வண்டி வேண்டும் என்று கேட்கப் பட்டிருக்கிறது. புது வண்டி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பதினொரு மாதங்கள் அவுட்-ஆஃப்-ஆர்டர் அல்ல. இரண்டு மாதங்கள் அவுட்-ஆஃப் ஆர்டராக இருந்தது. இப்போது ரெகுலராக ஃபங்ஷன் செய் கிறது.

திருமதி சி. குழந்தையம்மாள் : இந்த நடமாடும் மருத்துவ மனை வண்டிகள் ஏற்கெனவே ப்ரைமரி ஹெல்த் சப்-செண்டர் சாங்ஷன் ஆகி எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடங் களில் ப்ரைமரி ஹெல்த் செண்டர்களுக்கு இந்த வண்டி வேண்டு மென்று வற்புறுத்தியும் கொடுக்கப்படவில்லை. ஒன்று இந்த வண்டி கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சப்-செண்டர் கட்ட பணம் கொடுக்கவேண்டும். அந்த முறையில் இரண்டில் ஒன்று செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ப்ரைமரி ஹெல்த் செண்டரில் ஒரு மொபைல் வான் எல்லா இடத்திலும் இருக்கிறது. பக்கங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்று மருத்துவ வசதிகள் கொடுத்து வருகிறார்கள். அப்படி எங்காகிலும் குறிப்பாக இல்லை என்றால் தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாய பாங்கு

*533 **கேள்வி.—திரு. எஸ். ஜே. இராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா சித்தேரி கிராம கூட்டுறவு விவசாய பாங்கியில் தானிய ஈட்டுக் கடன் பேரில் மோசடி நடந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், விபரமென்ன ?

(உ) இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் ? அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) அரக்கோணம் தாலுகாவில் "சித்தேரி விவசாய பாங்க்" என்கிற பெயரில் கூட்டுறவு விவசாய பாங்க் எதுவும் இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, அங்கே இருக்கக் கூடிய பாங்க் இல்லை என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அந்த இடத்திற்குப் பக்கத்தில் இருக்கும் கிராமத் திலாவது இந்தத் தகராறு நடந்திருக்கிறது . . .

TRUTH ALONE TRIUMPHS